செ.வெ.எண்: 37 நாள் 19.01.2018

## பத்திரிக்கை செய்தி

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அச்சிறுபாக்கம் சரகம், ஆத்தூர் கிராமம் அருகே சென்னையிலிருந்து திருவண்ணாமலை நோக்கி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து ஒரு சிற்றுந்தின் மீது மோதியதில் சிற்றுந்தில் பயணம் செய்த புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், செம்பாட்டூர் கிராமத்தைச் சேர்ந்த திரு கருப்பையா என்பவரின் மனைவி திருமதி பிரபாவதி, திரு செல்வராஜ் என்பவரின் மனைவி திருமதி தமிழ்ச்செல்வி, திரு மோகன் என்பவரின் மனைவி திருமதி ராதிகா, திரு முருகையா என்பவரின் மகன் திரு தினேஷ் மற்றும் திரு சின்னராஜா என்பவரின் மகன் திரு இளம்பரிதி ஆகிய ஐந்து நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களை நேரடியாக சந்தித்து ஆறுதல் கூறினார். அப்பொழுது அக்குடும்பத்தினர் தங்களுக்கு தமிழக அரசின் உதவிகளை பெற உதவிடுமாறு கோரிக்கை வைத்தனர்.

அக்கோரிக்கையின் அடிப்படையில், இந்த சாலை விபத்தில் மரணமடைந்த குடும்பங்களுக்கு உதவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் பரிந்துரைத்தார். அப்பரிந்துரையின் பேரில் புதுக்கோட்டை மாவட்டம் செம்பாட்டூர் கிராமத்தைச் சேர்ந்த 5 நபர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.